

# மார்ச் 8

# சர்வதேச பெண்கள் தின வாழ்த்துக்கள்!

விண்ணில் பறக்கும் விமானத்திலிருந்து, மண்ணில் நடக்கும் விவசாயம் வரை, பெண்கள் தடம் பதிக்காத துறைகளே இல்லை என்னும் அளவு, அனைத்து பிரிவுகளிலும் பெண்கள் சாதனைகள் புரிந்து வருகிறார்கள். சமீபத்தில் இந்தியா ஒரே சமயத்தில் 104 செயற்கைக் கோள்களை ஏவிய சாதனையிலும் ஏராளமான பெண்கள் அதிகாரிகளாக, பொறியாளர்களாக பங்கேற்று நம்மைப் பெருமிதம் அடையச் செய்திருக்கிறார்கள். பல முன்னேற்றங்கள் இருந்த போதிலும், பெண்ணை போகப் பொருளாகவும், இரண்டாம்தர பிரஜையாகவும் பார்க்கின்ற பார்வையும், அணுகுமுறையும் சமூகத்தில் மாறவில்லை.

எனவே, பெண்கள் மீதான தாக்குதல்களும், இழிவு செய்யும் கொடுமைகளும், குழந்தைகள், சிறுமிகள் எனும் உணர்வு கூட இன்றி பாலியல் வன்முறைகளும் நம்மைச் சுற்றி நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஆரம்பக் கல்வியிலிருந்து ஊடகங்கள் வரை ஆண் - பெண் சமத்துவத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. சுரண்டலற்ற சமுதாயம் அமைக்கப்படும்போதுதான் பெண்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் உத்தரவாதம் செய்ய முடியும்.

நூறாண்டுகளுக்கு முன்பு நெசவாலைகளில் மிருகங்கள்போல் அடைக்கப்பட்டு வேலையைப் பிழிந்தெடுத்த முதலாளிகளுக்கு எதிராக பெண் தொழிலாளர்கள் ஏறத்தாழ 60000 பேர் அமெரிக்க தேசத்தில் வீதிகளுக்கு வந்து நடுங்கும் குளிரில் இரவும் பகலும் போராடிய வேலைநிறுத்த நாளையே சர்வதேச மகளிர் தினமாக நாம் அனுசரித்து வருகிறோம். 8 மணி நேர வேலை, குறைந்தபட்ச ஊதியம், தொழிற்சங்க உரிமை, வாக்குரிமை ஆகியவையே அவர்களின் கோரிக்கைகளாக வைக்கப்பட்டு போராட்டம் வெற்றியடைந்தது.

உலகமயக் கொள்கைகளின் காரணமாக, பணிப்பாதுகாப்பும், பணிநேரமும், கண்ணியமான ஊதியமும், தொழிற்சங்க உரிமையும் இன்றும் பெரும்பான்மைப் பகுதிகளில் முழுமையாக வழங்கப்படவில்லை.

BSNL நிறுவனத்தில் அதிகாரிகளாக, தொழில்நுட்ப ஊழியர்களாக, எழுத்தர்களாக, ஒப்பந்தத் தொழிலாளர்களாக பல்லாயிரக்கணக்கான பெண்கள் பணியாற்றி வருவதோடு, BSNL பாதுகாப்புக்காகவும் போராடி, BSNL வளர்ச்சிக்காகவும் பங்கு செலுத்தி வருகிறார்கள்.

வலுவான தொழிற்சங்கங்கள் காரணமாக பல்வேறு அடிப்படை வசதிகளும், பாதுகாப்பும் நமக்கு உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளன. ஒன்றுபட்ட போராட்டங்கள் மூலம் குழந்தை பராமரிப்பு விடுப்பையும் வென்றெடுத்தோம். 45 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு சிறப்பு மருத்துவ விடுப்புக்காக தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஒப்பந்த முறையில் பணியாற்றும் பெண் தொழிலாளர் கடுமையான சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்களும் சமநீதி பெற்றிட வேண்டும்.

பெற்ற சலுகைகளைப் பாதுகாக்கவும், மேலும் உரிமைகளை வென்றடையவும் நமது இணைப்பை வலுவாக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

பெண்களுக்கு கண்ணியமான வேலை, நியாயமான ஊதியம், பணியிடங்களில் பாதுகாப்பு, மகப்பேறு சலுகைகள், கல்வி, வேலைவாய்ப்பு உத்தரவாதம், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, **2017 - மார்ச் 9 முதல் ஏப்ரல் 30 வரை நாடு** முழுவதும் பிரச்சாரம் மேற்கொள்ளவும், BSNL, LIC, வங்கி உள்ளிட்ட அனைத்து பகுதி உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு அறைகூவல் விடுத்துள்ளது.

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த நிலையை மாற்றி, மெரீனாவிலும், நெடுவாசலிலும் லட்சக்கணக்கான பெண்கள் சமூகப் பிரச்னைகளுக்காக ஆவேசக்குரல் கொடுத்துப் போராடி வருவது, சுதந்திர போராட்ட காலத்தை நினைவூட்டுகிறது.

**பெண்கள் உரிமைகளுக்காகவும், பணியிட உரிமைகளுக்காகவும், பாதுகாப்பிற்காகவும், சமத்துவத்திற்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும், நாம் ஒன்றிணைவோம்! சிந்திப்போம்! செயல்படுவோம்!**

இவண்,

**BSNL உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு**
**தமிழ் மாநிலக் குழு.**